உ

கடவுள் துணை.

திருச்சிறாப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம்

தாலூகா கல்லங்குரிச்சி

# கலியபெருமாள் ஸ்வாமி

## கான சங்கீத கருணாமிர்தக்

# கீர்த்தனங்கள்.

முதல்பாகம்

இஃது

சிதம்பரம் தாலூகா பாளையங்கோட்டை நாடகஉபாத்தியாயன்

**P. A. இரத்தினஸாமியால்**

இயற்றியதை

விருத்தாசலம் தாலுக்கா தெற்கு வடக்குப்புத்தூர் கிராமம்

(Vannan Kudikkadu Board School Teacler )

கனம் மகா-௱-௱-ஸ்ரீ

**M. குப்புஸாமி பிள்ளை அவர்களால்,**

பார்வையிடப்பட்டு

விழுப்புரம்

ஸ்ரீருக்மணி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1929 [அணா 2.

OFFICE OF THE REGISTRAR MADRAS No. 4 MAR 1929

உ

கடவுள் துணை.

திருச்சினாப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம்

தாலூகா கல்லங்குரிச்சி

# கலியபெருமாள் ஸ்வாமி

## கான சங்கீத கருணாமிர்தக்

# கீர்த்தனங்கள்.

முதல்பாகம்.

இஃது

சிதம்பரம் தாலூகா பாளையங்கோட்டை நாடகஉபாத்தியாயன்

**P. A. இரத்தினஸாமியால்,**

இயற்றியதை

விருத்தாசலம் தாலுக்கா தெற்கு வடக்குப்புத்தூர் கிராமம்

(Vannan Kudikkadu Board School Teacher.)

கனம் மகா-ா-ா-ஸ்ரீ

**M. குப்புஸாமி பிள்ளை அவர்களால்,**

பார்வையிடப்பட்டு

விழுப்புரம்

ஸ்ரீருக்மணி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1929 [அணா 2

OFFICE OF THE ... No. ... 4 MAR 19..



பரிசோதித்தவர்

**கனம் மகா-ா-ா-ஸ்ரீ M. குப்புஸாமி பிள்ளையவர்கள்,**

இயற்றிய

## சாற்றுக் கவி.

---

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

---

செந்திருவைத் திருமார்பிற் சேர்த்தபரன் க்ரீடிக்கிச் செகதலத்தில்
மந்திரமு மாதவமு மறைமுதலாய்த் தானென்று வகுத்துரைத்தான்
ந்தரமாங் கல்லநகர் சுவைரத்னப் பாமாலை தோண்மேர்கொண்டான்
தந்திரமா மவனடியிற் சந்தவமு தந்துதித்தாற் சாரலாமே.

---

அக்கியோன் வெண்பா.

சீர்பூத்த ஸ்வேதநதி தென்பால்புத் தூர்பதிவாழ்
கார்காத்த குலத்துதித்த கவிபெருமான் பேர்பூத்தர்
குப்புஸாமிப் பிள்ளைகுரு வென்குறை தவிர்த்தார்
இப்பாக்கள் சோதித்துமே.

P. A. இரத்தினஸாமி

உ

கடவுள் துணை.

சிதம்பரந்தாலூகா பாளையங்கோட்டை பி. எ. ரத்தினசாமி இயற்றிய

கல்லங்குரிச்சி

# கலியபெருமாள் ஸ்வாமி கான சங்கீத

# கருணாமிர்தகீர்த்தனங்கள்

## கணபதி துதி.

வெண்பா.

கார்மேக வண்ணன் கல்லங்கு ரிச்சிபதி
பார்புகழ வந்தமர்ந்தான் பாவிசைத்தேன்—சீர்மகிழ
முந்தியு னைப்பணிவேன் மூஷிகமீ தேறிவந்து
தந்திமுகா நின்னருளைத் தா.

---

2. சோமசுந்தரனே என்றமெட்டு.

பல்லவி.

மதயானை மாமுகனே எனை
யாள வாருந் தாளைத் தாரும். (யானை)

அநுபல்லவி.

மானைக் கரத்தில் தரித்தோன் பாலா
மாமறைகளுக்கு மூலா
கானில் மாதுமுன்சென்ற லோலா
காரென் னையே பாருன் சேயே (யானை)
மூவர்கட்கு முதல் வோனே
முருகனுக்கு மூத்த வனே
தேவர்கள் ஜெபிக்குங் கோனே
தேசர் போற்றும் வாச ரேற்றும் (யானை)
சந்தையை வலமாக வந்தவா
தாசன்ரத்தின ஸாமிக்கு கந்தவா
செந்தமிழுக்கிசை செப்பச்சி றந்தவா
சேவடியே தாவெ னக்கு (யானை)

## கலைமகள் துதி.

விருத்தம்.

நித்யகல்யாணியை நிர்மலசொரூபியை
புத்தகபாணியை புலவர்கட்காவியை
சத்தியவாசியை சதுர்முகன்தேவியை
பத்யோடேத்தியே பதந்தனைப்போற்றுமால்.

### ஆதாரமே தேனுநீதருவாய் என்றமெட்டு.

கண்ணிகள்.

நான்முக னுவில் வசிக்குந் தாயே நீ
நல்வாக்கு தந்தெனைரட்சிப் பாயே
நான்தானுனக்கு அடிமை சேயே-நான்
நவிலுந் தமிழ்க்கருள் தருகு வையே (நான்)

அந்தரலோக மமர்ந்த வளே-நல்
ஆதாரஞானந் தருப வளே
சந்ததம் வேதமுறைப்ப வளே-சற்
சாதுக்கள்மேலே சிறந்த வளே (நான்)

ஞானக்கண் தந்திடுமன்னை யாரே-யுனை
நம்பினேனென்னீ கெதியில்லை வேறே
ஈனசுரந்தனை நீக்கி வேறே எனக்
கின்பசுராந்தர வாவா நேரே (நான்)

நாடினேனுன்னைநற்பதமளிப் பாய்-ஏழை
நான்செய்த குற்றந்தனைப்பொருப் பாய்
பாடும் பதத்திற் பிழைதவிர்ப் பாய்-நின்
பாலன் ரத்னஸாமி பாவுகப் பாய் (நான்)

## முருகன் துதி

### கட்டளைக் கலித்துறை.

குருவாயமர்ந்த ப்ரம்மனைச்சிறையினிற் குட்டிவைத்தாய்
உருவாய் விளங்கும் உமாபதிக்கன்று வுரைத்தபொருள்
தருவாயென்றெண்ணி யுன்றாள்பணிந் தேனிருதையலொடு
வருவாய் பரங்கிரி விட்டுமயின் மீதேறி வடிவேலனே.

### பஞ்சணைமீதினில் கொஞ்சுவோம் என்றமெட்டு.

கண்ணிகள்.

சிங்கார முருகா சேவற்கொடி யோனே
சிறுவன்றுதித் தேனுந்தன் சேவடியே தானே
திங்களணிந்தசிவ சங்கரன் சுதனே
மங்கையிருவர் கொஞ்சிமகிழ் வோனே வேலா (சிங்)

பக்தர் காவடியோ டாடிடும் ஆட்டம்
பார்த்துக்களிப்பீரது வுமக்கோர்கொண் டாட்டம்
முக்கிய ஸ்தலமென திக்குள்ளோர்கள் நாட்டம்
பக்குவநகர் பரங்கிரி வாட்டம் வேலா (சிங்)

தாருகனோடு சமர் செய்து களைத்தாய்
தையல் வள்ளிக்காய் வேங்கைமரமென முளைத்தாய்
மேருவை வேலினால் விரைவுடன் துளைத்தாய்
வேதனைச் சிறைதனிலே யடைத்தாய் வேலா (சிங்)

சத்திவே லுடனே ஷண்முகா வாரும்
தாசன் ரத்தின ஸாமி தமிழ்க்கருள் தாரும்
சத்ருசங்காரவேல்நின் சித்தம்கண் பாரும்
தயை புரிவா யேழை தமியனைக் காரும் வேலா (சிங்)

## ஆஞ்சநேயர் துதி.

வெண்பா.

வஞ்சியிளஞ் ஜானகிக்காய் வாருதியைத் தான்கடந்த
அஞ்சனையாள் மைந்தனெனு மனுமந்தா—னெஞ்சமது
கூடத்துணை இருந்தெங் கோமான்மேற் கீர்த்தனங்கள்
பாடஇதந் தந்திடக்கண் பார்.

தசரதன் சேயா என்றமெட்டு

கண்ணிகள்.

சிரஞ்சீவிராயா ஸ்ரீராமன் நேயா
சிறுவனைத்துதித்து சிந்தித்தேன் வாருந்தேவா (சிரஞ்)
அஞ்சனைபாலா அன்பர்க்கனுகூலா
பஞ்சாயரக்கர்தமைப் பதற அடித்தவாவா (சிரஞ்)
ராகவன் தூதா நாயேன்மேல் வாதா
சாகரந்தனைத்தாண்டி ஜானகி துயர்தீர்த்தவா (சிரஞ்)
பாலன் ரத்தினஸாமி பணிந்தேனுந்தனைகாமி
ஜாலஞ் செய்யாதுதவி சத்ருசங்காரா வா வா (சிரஞ்)

## கலிவரதராஜப்பெருமாள் துதி.

ஆசிரியம்.

அச்சுதா நந்தனே அரவணைச் செல்வனே அறங்கனை யீன்ற தேவா
அஞ்சலெனச் சொல்லி யானையைக்காத்தன்று அபயந்தாட் கொண்டவா
வச்ரமணி மார்பனே வானவர்சகாயனே வைதேகிலி மணவாளனே
மாயாதாகங் குடிகொள் வஞ்சகசூரரை வதைத்திட்ட வைகுந்தனே
இச்சையுட னயர்ச்சிதம் செய்யகிரிபிடித் திம்சையை நொடிதீர்த்துமே
இந்திரன் தன்னோடு வந்திட்ட தேவர்க ளிடுக்கண் அகற்றி வைத்தாய்
கச்சிக்கு நிகரான கானமயில் மானுலவு கல்லங்குறிச்சி பதிவாழ்
கலிவரதராஜனே காண்டீபநேயனே கருடவாகனக்கடவுளே.

மால்வணக்க விருத்தம்.

தந்தை தாய்க் குருவுமென்ற சகலமுநீயு மாயென்
சிந்தை யைக்குடியாய்க்கொண்ட தேசிகா வோர்விண்ணப்பம்
எந்தை யேவறுமைநோயி லிடரபடுமெளியேனும்நின்
மைந்த னையாளல்வேண்டும் மற்றொன்றுமில்லை வேண்டேன்.

முருகனிடம்போய் முறை சொல்வாய் கிளியே என்றமெட்டு.

பல்லவி.

ஸ்ரீகலிவரதா என் கவலை தீரையனே-சிகி
கலாபம் விரித் துலாவுந்திரு
விலாச முள பதி தனில்வளர அரி (கலி)
கஞ்சன் றனை யின்றுமே பிர
பஞ்சந்தனை யுண்டாக்கிய அரி (கலி)
கரு வுரு வீனை பெருஞ் சிறு வனை
அருள் புரிந் தெனை காருங் கரி குறை தீர்த்த அரி (கலி)
காலபாச துயர்தனை நீக்கியேவுன்
பாலனென கோலமலர்ப் பாதந்தனிற்சேரும் அரி (கலி)
காம வலை யாலே சதா காலமு நின்
ஞம நினை யாம லானேன் மாலே திரு அரி (கலி)
கார்த்தனேகெதி பக்தனுக்களித்
திட்டிடு மினி பட்டிடுந்துயர் அரி (கலி)

அநுபல்லவி.

அலை கடல் நடு விலலலர்ம களோ
டரவனை துயின்றவா
அமரர்கள் தின மடி பணிந்திடும்
ஐயா ஆழிசங் கேந்தும் ரகுநந்தனெனும் அரி (கலி)

சரணம்.

..லஞ் செய்வதும் சம்மதமோகோடி
சரணம் புரிந்தேனுன் ஸ்வாமி யுனைநாடி
..லன் ரத்ன ஸாமி பதந்தனைக் கொண்டாடி
பவசாகர துயர் நீக்கியே
பக்தி முக்தி யளித்திடு
பணிந்தேன் கனிந்தேன்
ஆவடைந்து கூவிநொந்து பால்சுரந்து கீழ்சொரிந்த
அழகிய புகழ் பெருங்கல்லங்குரிச்சி அரி (கலி)

கடலூரா பாற்காவடிக்காரா செந்தூரா என்றமெட்டு.

பல்லவி.

வாவாநீமாயா வானோர் சகாயா நேரில் (வாவா)

அநுபல்லவி.

மூவாசையிற் பட்டு மூடனானேன் கெட்டு
முத்திதந்தருள் வாய்மாலே அத்திமுகனம்மானே (வா)
சாமள நிறதேகா தாசர்கள் மேல்மோகா
நாமந்தனையே நம்பினேன் தாமதமே செய்யாமல் (வாவா)

அல்லல்வினை தீர்த்தவா அடியவரைக் காத்தவா
கல்லங்குரிச்சி நாதா காருங்கலிவரதா (வாவா)
சத்ருசங்காரனே தச அவதாரனே
ரத்னஸாமி கவிக்கருள்புரி நாதாயித்தருணம் அரிஹரி (வா)

வாகூர் வேலேந்தும் கையோனே என்றமெட்டு.

பல்லவி

கார் கார் கலியுக நாதனே உனை
கண்டோர்க்கிலை எமவேதனை (கார்)

அநுபல்லவி

யாருங்கெதி எனக் கையனே இல்லையே
அற்புத நவமணி மார்பனே
ஒப்பிலா சாமள தேகனே (கார்)

சரணம்.

பராசத்தி பாஞ்சாலிக்குத் துயி லளித்தாய்
பார்த்தீபனுக்குத் தேர் நடத்திக களித்தாய்
ஜராசந்தனோடு சமர் செய்து ஒளித்தாய்
தஞ்சம் ஆண்டருள் மாயனே
பஞ்ச பாண்டவர் நேயனே (கா

அல்லல் வினைகளறுக்கத் துணிந்தவா
அன்பர்களை யாளநெஞ்சங் கனிந்தவா
கல்லங் குரிச்சிபதியில மர்ந்தவா
கன்று பசுக்களை மேய்த்தவா
அன்று கம்சனை மாய்த்தவா (கார்)

வேதப் பொருளேமுன் வேள்வியைக் காத்தவா
வேண் டுந்துருவனை மேல் பதம் சேர்த்தவா
மாதவ முனியோர் வாதையைத் தீர்த்தவா
மாநில முழுதுமே யுண்டவா
நானினியுனை விடேனுண்டவா (கார்)

அண்டர் முனிவர் பணிந்திடும் நாதனே
அலமேலு மங்கை மருவும்வி னோதனே
தொண்டன் ரத்தினஸாமிசங் கீதனே
சோதிப் பொருளேயுந்தனை
ஓதித் தொழுதிடும்மைந்தனை (கார்)

ஐயாபழனிமலை வேலா என்றமெட்டு.

கண்ணிகள்.

கல்லங்குருச்சி நகர் வாசா-உனை
கைதொழுதேன் பிர காசா
அல்லல் தீர்க்கும்பவ நாசா-பாடி
ஆயரைக் காத்த விஸ் வாசா (கல்)

சக்கம் புதராமித தேவா-கோடி
சரணம் செய்தேனென் முன்வாவா
எங்கும் புகழ் மஹாராஜ பாவா-வரும்
இருளணுகாமல் நீ காவா (கல்)
அண்டர் முனிவர் தொழும் நாதா-நின்
அடியனைக்காத்திட வாதா
தொண்டர்கள் குறைதீர்க்கும் நீதா-தினம்
தோத்தரித்தேன் மலர்ப் பாதா (கல்)
ஜாலஞ் செய்யாமல் கதி வாரும்-பாழும்
சடலத்தால் படுந்துயர் தீரும்
பாலன் ரத்தினஸாமி கூறும்-தமிழ்
பதத்திற்கிதங்கிஞானந் தாரும் (கல்]

## விருத்தம்.

கருவணையி லினிசெனித் தவதிமிக வடையாமல் காமக்குரோதி என்னும்
பெருவினையை நீக்கியுன் றிருவடியிற் சேர்த்திடு பித்தருக் கிளையசேயன்
சரவணையிலேயுதித் தறுமுகன்றனை யீன்ற தாய் தனக்கண்ணுவரை
அரவணை துயின்றவா ஆதியேசோதியே அரிஹரி கோவிந்தனே.

வீணிலே இந்தகேணிலேன் என்ற மெட்டு.

## பல்லவி

கோவிந்தா கோபாலரைக் காத்தவனே குன்றைக்
குடையாய்ப்பிடித் திடிமாரியை
தடையாக்கிய நெடியோனேவா (கோ)

## அநுபல்லவி

வாவியில் வாரணம் வாய்விட்டலற முன்
வந்தாயுயிர் தந்தாய்சோதை
மைந்தாவை குந்தா ஹரி (கோ)

## சரணம்

பாவியசுரர் பதரஅடித்தவா
பரமன்றனு வைக்கை பற்றிபொடித்தவா
ஆவலாய் நஞ்சையணைத்துக் குடித்தவா
அருளேபரம் பொருளேமன
இருள் நீக்கியே யருள்வாய் ஹரி (கோ)
பாற்கடலிற்றுயில் பதுமன் மேற்கொண்டவா
பாவையரை திருமார்பினிற் பூண்டவா
பார்முழுது முனவாகவே உண்டவா
பாராய் கதி வாராய் துயர்
தீராய் ஜெய வீரா ஹரி (கோ)
சத்தி புதல்வன் ஷண்முகன்றன் மாமனே
சந்தகல்லங்குறிச்சி நகர் கோமானே

ரத்தின ஸாமிகவிக்கின்ப மரணோரீன
ராமா பல நாமா சத்ய
பாமா அணை பூமா ஹரி (கோ)

பாதசாரந்தப் பதுமைபோல என்றமெட்டு

பல்லவி.

கல்லங்குரிச்சி கவிவரதா [illegible]நேயா
கவலை தீருங் கண்டக்கண்பாருங்
கருணை தாருங் கதியிற்சேரும் (க

தொகையறா.

பொல்லாத சூர்மா பில்லாதழித்தவா
பூமகள் மருவும்நாதா
சொல்லாமலேகும் நிலையில்லாத் வாழ்வினல்
துன்புற்றே னின்னும் வாதா

அநுபல்லவி.

போற்றினேன் நீயே கெதி
சாற்றிடுவாயே மதி
போது மித்தனை சூது செய்வதுத
காது தருணம் வாது செய்யாதவா (க

தொகையறா.

தாசர்கள் நேசனே சௌர்ய உல்லாசனே
சதுர்முகனை யீன்றதேவா
தசஅவதாரனே சத்ருசங்காரனே
சர்வ பரிபூரணா வா

அநுபல்லவித்தொடர்.

தத்துவ மெனக்குத் தாராய்
நித்தமுந் துதித்தேன் சீராய்
தாசன் ரத்தின சாமி பதங்களி
ராசரேதஞ் சொல் லாமலருள் புரி (கல்)

துடிக்குமயில் நடிக்கும் என்றமெட்டு.

கண்ணிகள்.

கருடனேறி நீ விரைவுடன் வருவாய்-கவிவரதா வென்மேல்
கருணை வைத்து நின்னருள் தனைத்தருவாய்-உனைக்
கெஞ்சி வாரணந் தஞ்சமென்றிட
அஞ்சிடாதென பஞ்சாயுதனே
படிமிசை தனிற்கெதியென அடுத்தேன் பாரையுண்டோனே
பந்தபாச துயர தைவிடுத்தேன் (கரு)
கொடிய சூரர்பட அடித்தவனே கோபிகளோடு
கூடிநர்த்தன மிகநடித்தவனே-நான்
கோரும் வரமே தாரும் பதவி
சேருந்துயரந் தீருஞ்செல்விழி

திருமகள் மருவிடும் மணவாளா-திசைமுகனையீன்ற
சேஷசயன தீன தயாளா (கரு)

மடுவில்காளிங்கன் முடியில் தடித்தவா-மாயமாய் வந்த
மாது பூதகிஸ்தனமே குடித்தவா- அன்று

மாவலியை யுதைத் தான்சனமுங்கோ
புரவழிகாக்கும் படி வரம்பெற்ற

வாணன்மமதை மாறிடக் கெடுத்தாய்-மைத்துனற்காக
மனமிதங்கியே இருகரம் விடுத்தாய் (கரு)

கல்லங்குரிச்சி பதியமர்ந்தவா-காசினியோர்கள்
கலிவரதனெனப்புகழ்ந்தவா-பாதங்

கண்டு ஆனந்தங் கொண்டுசிற்றின்பம்
விண்டு புரிவேன் தொண்டு நிதமும்

சித்தமிதங்கி யுன்திருவடி சேராய்-பெரியசாமி புலவர்
சிஷ்யன் ரத்தின ஸாமியைக்காராய் (கரு)

ஓ திருநல்லூர் வள ரொய்யாரா என்றமெட்டு.

கண்ணிகள்.

வந்தெனை நீ ஆண்டருள் தா மாயா-மாது
வைதேகிம ருவிடுஞ்செவ் வாயா-குண
வாசுதேவர் தேவகி தன் சேயா-பெரும்

வரமதுபெற சிறமதை குனிந் திருகரங்குவித் தரிநமோவெனும்
வானவர் முதலோர்கள் சகாயாவுனை
வணங்கிடு மடியவர்க்கு நேயா (வந்)

அசுரர்குலங் கருவறுத்த காலா-ஓடி
யானையைக்காார்த்திட்ட ஆதி மூலா-சொந்த
அம்மானுயிர் வதைத்த சீலா-கானில்

அன்று பசுங் கன்று மேய்த்துக் குன்றைக்குடை என்று பிடித்
தன்பர் களைக் காத்த வனு கூலா-வந்த
உம்பர் கோன்றனைச் செயித்த லோலா (வந்)

கல்லங் குரிச்சிநகர் வேதா-உனைக்
கண்டு பணிந்தேன் கலிவரதா-முன்னைக்
கர்மவினை தீர்க்கும் லாப்பாதா-என்னைக்

காருங்கண்ணால் பாரும்பதஞ்
சேரும் இருள் தீருமஷ்ட

திக்குளோர் புகழ்ந்திடும் வி னோதா-தேன்
சர்க்கரைப் பாலபிஷேக நாதா (வந்)

பாரதம்முடித்த அதி தீரா-பஞ்ச
பாண்டவரைக் காத்த ஜெய வீரா-திருப்
பாற்கடல் துயின்றிடுங்கு பேரா-உந்தன்

பாத மற வாததின மோதுந்தமழ்க் கேதமறப்
பாருங்கடைக்கண் சமயம் வாராய்-தமிழ்க்
கூரும் ரத்ன சாமி துயர் தீராய் (வந்)

## ஆசிரிய விருத்தம்.

பண்டு நான் செய்திட்ட பாவங்களிம்மையிற் பாலியாய் வந்த தாலோ
பற்றுள்ள மைந்தனும் பந்துக்களுங்கால பாசமதுபோல பற்றிக்
கொண்டுபொருள் பூமியுங் கொள்ளென்று வடியனைக்கொடுமை மிகசெய்
(வதாலே
கோவென்று அலறியே கூவிளேனென்மீது கோபமோவறிகிலேனே
தொண்டு எனநிதமும்யா தொரு தொழிலுமில்லாமல் தோத்திரஞ் செய்ய
[வகையும்
தோன்றுமலையைவதும் தொய்யலே வுந்தனது தோழன விஜயன் போலவே
கண்டுவெந்தன் மனக்கவலை எல்லாமோட கருணைமுதந் தந்துநின்
கழலிணையிற் சேர்த்திடு கல்லங்குரிச்சிவாழ் கலியுக வரதராஜனே.

கண்டாலானந்தமே என்றமெட்டு.

### பல்லவி.

கண்டோர்க்கானந்தமே கலிவரதன் சேவடி (கண்)

### அநுபல்லவி.

தண்டாமரை மலர் முக சாமளநிறதேகனைக் (கண்

### சரணங்கள்.

அண்டாதி தேவர்நித மடிபணியு நாமமே
அன்பர்களைக்காக்கவந்த அரிபரந் தாமமே
தொண்டுபுரி வோர்களுக்கு சூழ்ந்திடாது க்ஷாமமே
தோகை வைதேகி நாதனை தோத்தரித்தால் க்ஷேமமே

தோளில் துளபமணியுஞ் சீலன்-முந்தி
காளிங்க நர்த்தனஞ் செய்த பாலன்-அவன்
தாளினை மறந்தவற்குக் காலன்-வரை
கோளினை மேற்றுயில் கொண்ட லோலன்

தொண்டைக்கனி வாயன்
அண்டினோர்ச காயன்
வண்டர்களுக்க பாயன்
எண்டிசையுண்ட மாயன்-பதம் (கண்)

பாவியசுரர்கள் சிரம் பற்றியே அரிந்தவன்
பாரினிற்செயும் பாப புண்ணியமறிந்தவன்
கோவினங்கள் மேய்த்துக் கோபாலருடன் திரிந்தவன்
குந்திமக்களோடிருந்து கொடுஞ்சமர் புரிந்தவன்

குன்றைக்குடையாக வேதான் எடுத்தோன் மறைவாய்
நின்று வாலிமீது சரந்தொடுத் தோன்-இலங்கை
சென்று ராவணாதியரை மடித்தோன்-போரில்
வென்று வர கோதண்டங்கை பிடித்தோன்

குஞ்சரந்தனைக் காத்தான்
கஞ்சனுயிரை மாய்த்தான்
தஞ்ச மென்றோரைப் பார்த்தான்
சஞ்சலங்களைத் தீர்த்தான்-அவனைக் (கண்)

...சென்று நெம்பாளள்ளி அள்ளி தின்றனன்
...க்காண இந்த அவனியின்கீழ் சென்றவன்
...ஆக வந்ததோர் மாரீசனைக் கொன்றவன்
மாநிலந்தழைக்க சந்த மாரனையு மீன்றவன்

மந்திரத்திலே யிருந்த தீரன்-வந்த
இந்திரன்றனை செயித்த சூரன்-துஷ்டரை
தந்...த்திறலே வெல்லுஞ் சோரன்-மிக
சுந்தரம் பொருந்திய கு பேரன்

மங்கையர் மகிழ் தேசன்
எங்கும் நிறைந்த ஏசன்
சங்கு நாதவி வேகன்
மங்களகர யோகன்றனைக் (கண்)

கல்லுருவாய் வந்துதித்த கர்த்தனைக்கொண் டாடுங்கள்
காலன் வந்தணுகிடாது காரணத் தேடுங்கள்
அல்லும் பகலுங் கோவிந்தாவென்றரியைப் பாடுங்கள்
அடியவ ரொன்றுகூடி யானந்தக்கூத் தாடுங்கள்

அப்படி நடந்தாலதி பக்தி-அவன்
பொற்பதங்கெதி யெனவே நத்தி-இருந்தால்
எப்படியாகிலும் வறும் முத்தி-இந்த
சொற்படி இருந்தால் நல்ல புத்தி

அல்லல் வினைக ளோடும்
இல்லையேல் வேறு நாடும்
கல்லங்குரிச்சிக் கீடும்
செல்வன் ரத்னம் பாடுந் தமிழ் (கண்)

## தொந்திசரிய மயிலே என்றமெட்டு.

## திருப்புகழ் சந்தம்.

கல்லங்குரிச்சி தலமே-கண்டவர்க்கு
அல்லலில்லை நலமே அவர்நாமத்தை
சொல்லித்தொழுது வலமே-வந்தவர்கள் மேலாமே

எந்ததேசமுங் கீர்த்தி-விளங்கிடவே
வந்த கலிய மூர்த்தி-அவருருவு
கந்த மலரின் நேர்த்தி-காடமர்ந்தார் மனப்பூர்த்தி

உத்தமர் வெகு கோடி அரிபஜனை
பக்தியுடனே பாடி பதம்பெறவே
சித்திரைதனை நாடி வருகிறார் பலர்கூடி

அத்தன் பெரியசாமி சிஷ்யனும்
பக்தன் ரத்தினஸாமி பாடுந்தமிழ்
மெத்த மகிழும் பூமி ஓதிட சுகமாமே (கல்)

## செந்தமிழுலகினில் வாழ் என்றமெட்டு.

## கண்ணிகள்.

கல்லங்குரிச்சி நகர் எல்லையிலமர்ந்தவா
கல்லைப்பெண்ணாக்கி வைத்தவா-அசுரருட
தொல்லை யறவே மாய்த்தவா-உனைக்

கண்டோர் வினை துயர் வண்டாப்பறந்திடும்
தண்டாமரை முகா அண்டாமலே இருள்

கண்ணு லெந்தனைப்பாருமே—கருடனேறி
வண்ணு வெந்தனைக் காருமே. (கல்)

அண்டர்களைக் காத்தகோ தண்டபாணியேஇந்த
அகில புவன முண்டவா ஆழிநடுவில்
அரவின் மேற்றுயில் கொண்டவா-கைலை

ஆரனடி தனைக்காண விரைவுடனெழுந்துமே
தரணியைக்கிளரியே ஒருகொடி தனில்வந்த

ஆதிவராக ரூபனே—அலங்கிர்தமுத்து
ஆரமணியும் மார்பனே (கல்)

வம்பனிரண்யனுக்காய் கம்பம் நடுவில் நர
சிங்கமதாயுதித்தவா அவனுடலை
பங்கப்படக் கிழித்தவா அன்று

வானவ ரொடுமுதலானவர்களுமரி
தீனதயாளா வென ஆனந்தமொடு ஆடி

வந்தடி போற்றி நின்றுரே—அனைவர்களும்
வாழ்த்தி மேலோகம் சென்றுரே (கல்)

பந்த பாசங்களெனுந் தொந்தரவை நீக்கியுன்
பாதாரந்தனிற் சேருமே-எந்தனுக்கொரு
ஆதாரமில்லை வேறுமே-மிக

பக்தியாயுனை என் சித்தத்திலரிஎன
நித்தமுந் துதிசெயும் ரத்தினஸாமியும்

பாடுஞ்செந்தமிழ்க்கீதமே—பாவலரிதை
பார்த்துப் பொறுப்பீர் ஏகமே (கல்)

மலடிவயிற்று மகன்போலே என்றமெட்டு.

திருப்புகழ் சந்தம்.

ஆதிமூலா எனைக் காருமே-உனை
யன்றி துணையில்லை வேறுமே-இரு
மாது சமேதராய் வாருமே— துயர் தீருமே

மக்கள் மனை பெண்டு பொருளாலே-நாமம்
மதிமறந்திருந்தேன் திருமாலே-பெருந்
துக்கமானே னிந்த புவிமேலே—பிறந்ததினுலே

மாய வாழ்க்கையை மமதையை நீக்கு-திரு
மலரடி தனிற்சேர விழிநோக்கு-இனி
காயமென்பதனைப் போக்கு—நற்கெதியாக்கு

கலிவரதனை நிதந் துதித்தாடு-பொல்லா
காலன் வந்தணுகிடா வுகைதேடு-சிறு
பாலன் ரத்தினசாமி பதம்பாடு—நற்கெதிக்கீடு.

## தசாவதார மஹிமை

தென்பரங்குன்றதிப தேவா மெட்டில்.

கண்ணிகள்.

வைகுந்த வாசா என்மேல் வஞ்சமா-வுன்
மைந்தன் படுந்துயரங் கொஞ்சமா
சகலபுவன நிதந் தழுவிடுமுன் பொற்பாதந்
தந்து சேயனை வந்துகார்த்திடுங்
கந்தவேளுக்குச் சொந்தமாமனெனும் (வை)

மறையைக் கவர்ந்துகொண்டு ஓடியே-வளை
மறைந்தசோமுகன்றனைத் தேடியே
விரைந்து மச்சமாகியே வீரமுடனேகியே
வெட்டிசங்கரித் திட்டு வேதனின்
கட்டு நூலைத்தந் திட்ட மாதவ (வை)

...ம்பர்களுண்டு களிப் படையவே-அந்த
...ந்தியிலமுதமுங் கடையவே
கும்பலலரக்கண்டு கூர்மவதாரங்கொண்டு
குன்றைத்தாங்கி நீ ரன்று தேவர்க
ளொன்று கூடிசுதை தின்றவாயனெனும் (வை)

அலைகடல்தனிற் பாரை யழித்திட-இரண்
யாட்சனவனுயிரை யொழித்திட
வலிமைதனில் மிகுந்த வராகமதாக வந்த
வம்பனைவதைத் தம்புவிதனை
கொம்பினால் விரித் திம்சைதீர்த்தனை (வை)

இந்த்ராதியர் பணிந்து நடக்கவே-செய்த
இரணியன் கெர்வமதை யடக்கவே
வந்தீர் பஹிரங்கமாய் வளர்ந்த நரசிங்கமாய்
வண்டனைக்கிழித் தண்டர் காணவே
தொண்டனுக்கு முடி கொண்டு தந்தனை (வை)

வந்தாய் வாமனமாய்யாரும் பார்க்கவே-அன்று
மாபலியை மூவடிமண் கேட்கவே
அந்தப்படிதந் தான்பார் அப்போதெழுந்தமேவோர்
அடியிற் பூமியை நொடியளந்தவன்
முடியைத்தள்ளியே அடியிற்சேர்த்திட்ட (வை)

வேதியர் தனக்காக அன்றுமே-வந்த
வீரபரசுராம னென்றுமே
பாதிமதியணிந்த பரமனிடமிருந்

பரசுபெற்றுவந் தரசர் தன்னுட
மரபை முற்றிலும் கருவறுத்திட்ட (வை)

ராவணன்செய்த தீமை யறிந்துமே-ரெகு
ராமனுகவயோத்தி பிறந்துமே
வாவியிலணைகட்டி வானரசேனை கூட்டி

வந்து ராவணன் நொந்துமாளச்செய்
தந்தரசை நீ தந்தாயன்பர்க்கே (வை

தப்புசெய் சரா சரர்க்கு எமனாய்-வந்தாய
தரணியோர் போற்றும்பல ராமனாய்
துப்புவரை கெடுத்து துணிவாய்ப்படையெடுத்து

துஷ்டரை கொடும் சிட்சைசெய்துமே
இஷ்டரை மிக ரட்சித்தாண்டவா (வை

மன்னன் வசுதேவர்க்கு சேயனாய்-தி
மலர்க்கண்ணனுயுதித்தாய் ஆய
குன்னமில்லாமல் பார்த்து கோபாலர்களைக்காத்

குந்திதேவியின் மைந்தரோடுஇ
ருந்து பாரதம் சி றந்து நின்றிடும் (வை

காசினியை யழிக்கக் கண்டுமே-வரும்
கல்கியாமவ தாரங் கொண்டுமே
வாசி யென்று பகர வந்துமே வுன்றிரு

வடியை சேவிக்கு மடியரைக்காத்துக்
கொடியரை வென்ற நொடியோனேவாரும்(வை)

குவலயத்தோர் பணிய கீர்த்தியாய்-கல்லங்
குரிச்சி வந்தாய் கலிய மூர்த்தியாய்
பவசாகரம் நீக்கியே பாலன் ரத்னஸாமியைப்

பரமநாதனே தருணமாளெனைக்
கருடனேறியே வருவாய் நேரினில் (வை)

மங்களம்.

லோகமான்ய என்றமெட்டு. (தொஹைறு நீங்கலாக)

ஆதிமுதலாயுதித்த ஐங்கரர்க்கு மங்களம்
பாதிமதியணி பரமனுக்கு மங்களம்
மங்கை வள்ளிக்குஞ்சரி வடிவேலர்க்கு மங்களம்
பங்கயன் பாரதி பாரசத்திக்கு மங்களம்

| | |
|---|---|
| நடன் மாருதி கார்மேக வண்ணர்க்கு | மங்களம் |
| ருமகள் நிலமகள் சேவடிக்கு | மங்களம் |
| ல்லங்குரிச்சி பதி கண்டவர்க்கு | மங்களம் |
| வல்வினை தீர்க்கும் கலிவரதர்க்கு | மங்களம் |
| இந்தியாவையாளும் நம்பிறைவனுக்கு | மங்களம் |
| சந்தக்கவி சொல்லுங் கவிவாணர்க்கு | மங்களம் |
| பட்சமுள பெரியஸாமி பாவலர்க்கு | மங்களம் |
| இச்சையாய் சோதித்து நற்சாட்சி ஈன்றோர்க்கு | மங்களம் |
| த்தகப்பதிப் பச்சுக்கூடத்து ளோர்க்கு | மங்களம் |
| மெத்த விரும்பியதை வேண்டினோர்க்கு | மங்களம் |
| மங்களம் மற்ற விண்மண் முதற் பொருட்கு | மங்களம் |
| மங்களம் மங்களம் ஜெய மங்களம் சுப | மங்களம் |

### வாழ்த்து விருத்தம்.

திருமகள் மாது வாழ்க ஜெகதலம் செழித்து வாழ்க
அருமறையுணர்ந்தோர் வாழ்க அரசன் செங்கோலும் வாழ்க
கருடவாகனத்தான் வாழ்க கற்புள்ள மாதர் வாழ்க
கருணை மிக்கமுதமீதிற் கருத்துளார் வாழ்க வாழ்க.

சுபம். சுபம். சுபம்.

கலியபெருமாள் ஸ்வாமி கழலிணைகளே துணை.

முற்றுப்பெற்றது.



# அன்பார்ந்த

## சகோதர சகோதரிகளே!

இந்நிலவுலகின்கண் அரிதரிது மானிடராதலரிது, என்னும் நமது மூதாட்டியார் முதுமொழிக்கிணங்க நம்போல்வார்க்கு சப்த சாகரம் போன்ற இவ்வெழுபிறவிகளில் இன்னுமோர் தெய்வ பிறவிதான் இறுதியுள்ளது. இதுகடந்து அதையடைய இம்மட்டிற்றுணை பெற்ற அம்மஹா பரமபுருஷனையே முடிவுவரை நாமெல்லாம், ஏத்திப் பணிந்து போற்றிப் புகழ்வோமாக.

பாளையங்கோட்டை
19—2—29

அடியார்க்கடியன்,
**P. A. இரத்தினஸாமி.**